# ஓம் ஸ்ரீ சாயிராம் பிரசாந்தி சந்தேஷ் வினா விடை நேரம்

## வினா எண் **344** தலைப்பு:**"**பகுத்தறிந்து முடிவெடுத்தல்**"**

நம் அன்புக்குறிய பேராசிரியர் திரு அனில்குமார் சாயிராம் சார் அவர்களின் உள்புறமாக தேடுவது என்றபுத்தகத்தின் பக்கம் ***57-62*** லிருந்து தேர்வு செய்யபட்ட வினா விடை பகுதி*.*

கேள்வி:இவ்வுலகில் சிலர் தாங்கள் தான் ஏசு கிறிஸ்துவின் அவதாரம் என்று சொல்லி கொள்கிறார்களே.அவர்களை பின்பற்றலாமா

பதில் அனில்குமார் சார்:
வேண்டாம்.வேண்டவே வேண்டாம்.பலர் தாங்கள் தான் ஏசு கிறிஸ்துவின் மறு அவதாரம் என்று கூறி கொள்கிறார்கள்
அவர்கள் பின் நாம் செல்ல வேண்டாம்.

அடுத்த கேள்வி:
என்னுடைய தொழிலில் நான் தர்மத்திற்கு எதிராக சில காரியங்களை செய்ய வேண்டியுள்ளது. நான் என்ன செய்யட்டும்.

பதில் அனில்குமார் சார்:
எந்த தொழிலில் நீங்கள் பாவம் செய்ய வேண்டியிருக்கிறது அல்லது எந்த தொழில் உங்களை பாவம் செய்ய தூண்டுகிறது என்பது எனக்கு தெரியாது.
ஒரு போலீஸ் அதிகாரி குற்றவாளியை அடித்து உண்மையை வரவழைக்க வேண்டியுள்ளது.
ஒரு ராணுவ வீரர் தேசத்திற்காக எதிரிகளை சுட்டு கொல்ல வேண்டியுள்ளது.
இதெல்லாம் அவர்களுடைய தொழில் தர்மம்.
பாவங்கள் அல்ல.ஒருவரது உடைமைகளை அபகரிக்கும் நோக்கத்தில் அவரை கொல்வது பாவம். ஒருவர் குற்றவாளி என தெரிந்தும் அவரை தண்டனையிலிருந்து காப்பாற்றுவது பாவமாகும்.

அடுத்த கேள்வி:
எதிர்வினை ஆற்றுவது என்பதற்கும் எதிர்கொள்வது என்பதிற்கும் உள்ள வித்தியாசம் என்ன.

பதில் அனில்குமார் சார்:
எதிர்வினை ஆற்றுவது என்பது நேர்மறை யாகவும் இருக்கலாம்.எதிர் மறையாகவும் இருக்கலாம். ஆனால் எதிர் கொள்வது என்பது பெரும்பாலும் நேர்மறை யானதாகவே இருக்கும்.எதிர் வினை ஆற்றுவது

சில சமயங்களில் கோபமாகவும் வன்முறையுடனும் இருக்கலாம்.ஆனால் எதிர் கொள்வது என்பது எப்போதும் அமைதியானதாகத்தான் இருக்கும்.
எதிர் கொள்வது என்பது ஹிருதயத்திலிருந்தும் எதிர் வினை ஆற்றுவது மனதிலிருந்தும் பிறக்கிறது.
உயிர் இல்லாத ஜட பொருள்கூட சூழ்நிலையை எதிர் கொள்கிறது.தூய அன்பு காட்டும் போது கல் கூட உடைந்து விடுகிறது.
ஒரு சாதாரண பாறையை நம் ஸ்வாமி தன் திருக்கரங்களால் தொட்ட போது அது ஷீரடி ஸ்வாமி விக்ரஹமாக மாறியது.
நம் ஸ்வாமி ஒரு முறை சில மலர்களை கையில் எடுத்துக் கொண்ட போது அவை கிளியாக மாறி பறந்தன.
ஸ்வாமி மனிதர்களாகிய நம்மை தொடும் போது அது நமது ஹிருதயத்தை வருடிக்கொடுக்க ஒரு தெய்வீக பேருணர்வை பெறுகிறோம் அல்லவா.நமது கண்களிலிருந்து ஆனந்த கண்ணீர் வடிகிறதல்லவா
காதுகள் பஜனை பாடல்களை கேட்கும் போது நமது உடலும் ஆனந்தத்தில் ஆடுகிறது அல்லவா.
ஸ்வாமியின் லீலைகளை மஹிமாவை கேட்டுக்கும் போது நாம் அவர் பால் ஈர்க்கப்பட்டு மன அமைதியும் திருப்தியும் பெற்று அவரை வழிபட தொடங்குகிறோம் அல்லவா.ஸ்வாமியின் கட்டளை படி நாம் சமுதாய சேவை பணிகளிலும் ஈடுபடுகிறோம் அல்லவா.இவை அனைத்தும் தான் எதிர் கொள்வதாகும்.
எனவே எதிர் கொள்ளவது என்பது கடவுள் நமக்கு கொடுத்துள்ள வரமாகும்.

அடுத்த கேள்வி:
நான் ஹோட்டல் நிர்வாக துறையில் பணி செய்வதால் தினமும் மாமிச உணவு வகைகளை மது பானங்களை சுவைக்க நேரிடுகிறது.
இதனால் என்ன வாகும்.

பதில் அனில்குமார் சார்:
இதற்கு என்னிடம் தீர்வு இல்லை.நானாக இருந்தால் அந்த வேலையை விட்டு விட்டு ஓடி விடுவேன்.இந்த உலகில் எவ்வளவோ வேலை வாய்ப்புகள் உள்ளன.எனவே என் மனசாட்சிக்கு விரோதமான பணியில் நான் இருக்க மாட்டேன்.

அடுத்த கேள்வி:
நாம் எவ்வளவு காலம் கடவுள் சிந்தனையை பிரதிபலித்தபடி இருக்க வேண்டும்.

பதில் அனில்குமார் சார்:

இது நல்ல கேள்வி.ஒரு குழந்தை தன் தாயிடம் அம்மா நான் எவ்வளவு உணவு சாப்பிட வேண்டும் என கேட்டால் வயிறு நிறைந்து திருப்தி உண்டாகும் வரை சாப்பிடு என்று தானே கூறுவார்.
அம்மா நான் எவ்வளவு நேரம் உறங்க வேண்டும் என கேட்டால் உனக்கு எழுந்திருக்க வேண்டும் என தோன்றுகின்ற வரையில் இனி மீண்டும் உறக்கம் வராத வரையில் நீ உறங்கலாம் என்று தானே தாய் கூறுவார்.
நான் எவ்வளவு குளிர் பானம் குடிக்க வேண்டும் என கேட்டால் உனது தாகம் தீரும் வரை என்பது தானே பதிலாக இருக்க முடியும்.எனவே இது கால நேரம் சம்மந்தப்பட்டது அல்ல.மாறாக ஒருவரது ஈடுபாடு மற்றும் சௌகரியங்களை பொறுத்ததாகும்

அடுத்த கேள்வி:
சாயிராம்.எனது கேள்வி வாழ்க்கையில் சரியான முடிவெடுக்கும் திறன் பற்றியதாகும்.எனது புத்தியை கொண்டு சிந்தித்து முடிவெடுத்தாலோ அல்லது மனதை கொண்டு முடிவெடுத்தாலோ அல்லது உள்ளுணர்வினால் தூண்டப்பட்டு முடிவெடுத்தலோ அந்த முடிவுகள் தவறாகவே போய் விடுகின்றன.
நன்றாக முடிவெடுக்கும் திறனை நான் எவ்விதம் பெறுவது.

பதில் அனில்குமார் சார்:
இதுவும் ஒரு நல்ல கேள்வி.
என் பதில் என்னவென்றால் எந்த முடிவையும் எடுப்பதற்கு முன்பாக முதலில் இறைவனிடம் பிரார்த்தனை செய்து கொண்டு பிறகு முடிவெடுங்கள்.
அர்ஜுனன் இதை தான் செய்தார்.பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடம் பிரார்த்தித்து அதன்படி செயல்பட்டார்.
ஆனால் அவருடைய மூத்த சகோதரரான தர்ம ராஜாவோ முதலில் தானே முடிவெடுத்து செயல்படுத்தி விட்டு அதனால் துன்பமுற்ற போது பகவான் ஸ்ரீ கிருஷ்ணரை பிரார்த்தித்தார்.
இன்று செவ்வாய்க்கிழமை.நான் பொதுவாக ஞாயிற்று கிழமை தான் பக்தர்களிடம் பேசுவேன்.
எனவே ஏதாவது சாக்கு சொல்லி இன்றைய கூட்டத்தை தட்டி கழித்து விடலாம் என நினைத்தேன்.
ஆனால் என்ன ஆயிற்று.
ஸ்வாமி சங்கல்பபடி இதோ இங்கே கூட்டம் நடந்து கொணாடிருக்கிறது.நீங்கள் அனைவரும் வந்திருக்கின்றீர்கள்.நமது முடிவு என்னவாக இருந்தாலும் இறுதியில் தெய்வ சங்கல்ப படிதான் எல்லாம் நடக்க போகிறது.
என்னுடைய முடிவுகள் தெய்வ அனுக்கிரஹத்துடன் இருந்தால் அவை சரியானதாக அமையும்.

இல்லையென்றால் அவை தவறானதாகும்.
அப்படி தவறானதாக போய்விட்டாலும் அதுவும் என்னுடைய நன்மைக்கே.
முடிவெடுப்பது என்பது தொடர்ச்சியாக அறிந்துணர்வது என்றால் அது நேர்மறையாகும்
ஆனால் அதுவே வேறுபாடுகளை ஊக்குவிப்பதாக இருந்தால் அது எதிர்மறையானதாகும்.

அனைவருக்கும் நன்றி வர இருக்கின்ற நாட்களில் மேலும் ஸ்வாமி யின் அருளுரைகளை தொடர்ந்து கேட்டு மகிழ்வோம் ஜெய் சாயிராம்